வேலூர் மாவட்டகூடுதல்முதன்மைக் கல்விஅலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : க. முனுசாமி, எம்.ஏ., எம்.எஸ்.சி., எம்.பி.ஏ., பி.எட்., எம்.பில்.,

ந.க.எண்: /SS/2022 நாள்:26.09.2022

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 2022–2023 ஆம் கல்வி ஆண்டில் அரசு உண்டு உறைவிட மாதிரிப் பள்ளியில் – பணிபுரிவதற்கு மாற்றுப் பணியில் – முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் – விடுவித்தல் – சார்பு.

பார்வை: சென்னை, மாநிலத் திட்ட இயக்குநர் அலுவலர் அவர்களின் செயல்முறை, ந.க.எண்:2990/A11/MS/SS/2022, நாள்: 13.07.2022

------

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம் 2022–2023 ஆம் கல்வி ஆண்டில், வேலூர்–9 பிள்ளையார்குப்பத்தில் இயங்கும் அரசு உண்டு உறைவிட மாதிரிப் பள்ளியில் பணிபுரிவதற்கு மாற்றுப் பணியில் இணைப்பில் உள்ள முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களை விடுவிக்க சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், முதுகலை ஆசிரியர்கள் மாற்றுப் பணியில் செல்வதால் ஏற்படும் காலி பணியிடத்தை முழு கல்வி தகுதியுடன் உள்ள தற்காலிக ஆசிரியர்களை சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் நியமித்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பணியில் அமர்த்தப்படும் தற்காலிக ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.15,000/– நிர்ணயிக்கப்படுகிறது. அவர்கள் மறு உத்தரவு வரும் வரை பணிபுரிய அனுமதிக்கப்படுவர். தற்காலிக ஆசிரியர்கள் நியமித்த பிறகு அவர்களுடைய தகுதி சான்றிதழ்கள் நகல், வங்கி கணக்கு புத்தக நகல், ஆதார் நகல் ஆகியவை ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கூடுதல் முதன்மைக் கல்விஅலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
வேலூர் மாவட்டம்.

இணைப்பு :

1. ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல்.

பெறுநர்

1. சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்.